# கலைத் திட்டமும் ஆசிரியரும்

கற்பிப்பவர், கற்பவர், கற்றல் என்பன முறைமையான கல்வியின் மூன்று முக்கிய அம்சங்கள் என்பதை நாம் அறிவோம். இது ஒரு முக்கோணத்தின் மூன்று அடித்தளங்கள் போன்றதாகும். ஆசிரியர், மாணவர், கலைத்திட்டம் என்ற இம்மூன்றையும் வேறுப்படுத்திக் காட்டுவது கடினம். எனினும் மாணவர் வாழ்வில் ஆசிரியருக்கும், கலைத்திட்டத்திற்கும் இடையேயுள்ள தொடர்பின் முக்கியத்துவத்தை இந்த தொகுப்பானது எடுத்துக்காட்ட முனைப்படுகிறது.

தற்காலக் கல்வி எண்ணக்கருக்களுக்கு ஏற்ப மாணவர் என்பவர் கற்பவர் அல்லது கற்றலில் ஈடுபடுபவராவர். ஆசிரியர் என்பவர் கற்பிப்பவர் என்பதைவிட கற்க வழிகாட்டுபவர் எனலாம். கலைத்திட்டம் என்பது கற்பித்தலுக்கும் கற்றலுக்கும் மூலமாக அமைவதாகும். ஆகவே, ஆசிரியரைப் போல் மாணவரும் கலைத்திட்டத்தைப் பயன்படுத்துகிறான் தேவையேற்படும்போது அதனை உபயோகித்துக் கொள்கிறான். கலைத்திட்டம் என்பது நிரந்தரமானதொன்றல்ல.

காலத்துக்குக்காலம் சமூகத்துக்குச் சமூகம், வகுப்புக்கு வகுப்பு வேறுபடும் தன்மையானது, அவ்வாறே கலைத்திட்டம் பொதுவானது, தானே தோற்றம் பெற்றதொன்றல்ல, அது சில தனியாட்கள் உதவியுடன் தேவைக்காக உருவாக்கப்பட்டது. ஆகவே தேவையான போது அதில் மாற்றங்களைச் செய்து கொள்ளலாம்.

கலைத்திட்டத்தை ஒழுங்குபடுத்துவதில் அநேகர் பங்குகொள்வர். வளர்ச்சி அடைந்த நாடுகளின் கல்வி தொடர்பான நிபுனர்கள் பங்கு கொள்வர். கலைத்திட்டம் ஒழுங்குபடுத்தலில் அதிகமானோர் பங்கு கொள்வது நல்லது என்பது சில கல்வியியலாளர்களின் கருத்தாகும். மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர், கல்வி நிபுணர்கள், கொள்கை வகுப்போர் ஆகியோர் இதிலடங்குவர். கலைத்திட்டத்தில் பாடசாலைக்கல்வி முறையின் பயன் தங்கியுள்ளது. ஆகவே,

பாடத்திட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் மாற்றியமைப்பதற்கும் அதில் அனுபவமும், அறிவும், முயற்சியும் உள்ளவர்களே பங்கு கொள்ளல் வேண்டும். இதனை ஆசிரியர், கலைத்திட்டமும் ஆசிரியரும், கலைத்திட்டத்தைத் தயாரிப்பதில் ஆசிரியர் பங்கு, கலைத்திட்ட மாற்றங்கள், கலைத்திட்ட மாற்றம் தொடர்பாக ஆசிரியரின் பங்கு,

கலைத்திட்டம் மாற்றம் அடைவதற்கான காரணங்கள், கலைத்திட்ட நவீனமாக்கல் போன்றனவற்றினூடாக அறியலாம். ஆசிரியர் எனும் எண்ணக்கரு. ஆசிரியரை நீண்ட காலமாக கற்பிப்பவராக அறிமுகப்படுத்தினோம். புராதனக் கீழைத்தேயக் கல்வி முறையில் குறிப்பாக இலங்கையில் கற்பிப்பவர் மட்டுமல்ல, அவர் சமூகத்தின் ஒரு தலைவராயும் போதனையாளராயும் ஒரு கற்ற முதியவராயும் எல்லோரதும் கௌரவத்திற்குப் பாத்திரமானவராயும் இருந்தார்.

அண்மைக்காலத்தில் இளமையில் ஆசிரியர் தொழிலை ஆரம்பிப்பதனால் பலர் ஆசிரியர் கருமங்களைப் பாடசாலை கற்பித்தலுக்கு மட்டும் வரையறுத்து நோக்க முற்பட்டனர். ஆசிரியர் தொழில், சம்பளம் பெறும் தொழிலாக மாறியது. சமூகத்தில் இத்தகைய தொழில்களுக்குள் சம்பளம் பெறுவோர் இருந்தனர். இதனால் ஆசிரியரின் பங்கினை வரையறுத்து நோக்க வழியேற்பட்டது.

எனினும் நவீன கல்வி எண்ணக்கருக்களுக்கும் சமூகத்தேவைகளுக்கேற்ப பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருத்தல் அவசியம் என்பதால் ஆசிரியரின் பங்குபற்றி விரிவாக அறிதல் அவசியம். ஆசிரியர் பங்கினை ஒரு செயலுக்கு மட்டும் வரையறுத்தல் முடியாது. கற்பித்தல், கற்கை செய்தல், கற்க வழிகாட்டல், போதித்தல், வழிநடத்தல், மதிப்பீடு செய்தல் ஆகிய கருமங்கள் தவிர்ந்த மேலும் பல கருமங்களை தற்கால ஆசிரியர்கள் மேற்கொள்கின்றனர்.

கலைத்திட்டமும் ஆசிரியரும் பாடசாலையில் கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் கலைத்திட்டம் அடிப்படையாக அமையும். கலைத்திட்டத்தைப் பயன்படுத்துபவர் ஆசிரியரே. **கலைத்திட்டம் தொடர்பாக ஆசிரியரின் பங்கினை அறிய அவரது கருமங்களை விரிவாக அறிதல் வேண்டும்.**

1. குறிப்பிட்ட பாடப்பகுதிக்குள் அறிவு அனுபவம் என்பன மாணவருக்குக் கிடைக்கச் செய்வது ஆசிரியரே ஆவார். போதித்தல் மூலம் பாடம் கற்பித்தலும், கற்கப்பண்ணுவதும் நடைபெறும் பாடத்திட்டத்தினை நன்கு விளக்கி, அதனை மாணவருக்கு வழங்குபவரும் ஆசிரியராவார்.

2. பாடவிடயங்களைத் தெளிவாக அளிப்பதற்குச் சிறந்த ஏற்ப முறைகளை உருவாக்கிக்கொண்டு , கற்பிக்கும் முறைகளுடன் உபகரணங்களையும் நிர்மாணித்துக் கொள்ளபவராகவும் அல்லது பெற்றுக்கொள்பவராகவும் ஆசிரியர் காணப்படுகின்றார்.

3. கலைத்திட்டங்களைப் பயன்படுத்தும் போது ஆரம்பத்திலேயே அதனை நிராகரித்துவிடாது அதற்கு அனுகூலமாக நடக்கக்கூடியளவு ஆவல் இருத்தல் வேண்டும்,விமர்சிக்க முன் ஒத்துழைப்புடன் பங்கு கொள்பவராதல் வேண்டும்.

4. ஈற்றில் தேவையான இடங்களில் விமர்சிக்கலாம். கலைத்திட்டத்தில் அபிவிருத்திக்கு விமர்சித்தல் பெரிதும் பயன்படும். இங்கு கலைத்திட்டத்தை மதிப்பீடு செய்யவும் முற்படுபவராகவும் ஆசிரியர் காணப்படுகின்றார்.

5. கலைத்திட்டம் தொடர்பாக நடைமுறை அனுபவங்கள் பெறுபவர்களுள் ஆசிரியர் முக்கியமானவர். இங்கு அளவும், தகுதியும் பற்றி நன்கு அறிபவரும் ஆசிரியரே, மாணவர்களின் உணர்வுகள், மனோநிலைகளை அறிபவரும் அவரே, ஆகவே நடைமுறை அனுபவத்தினூடாக கலைத்திட்ட முகாமையாளர் என்ற வகையில் ஆசிரியர் முக்கிய பங்கு வகிக்கிறார்.

பாடத்திட்டம் தொடர்பாக ஆசிரியரின் பல்வேறு நடத்தைகள் பற்றி இவ்வாறு விரிவாக நோக்கும்போது ஆசிரியரின் பங்கினை இலகுவாக அறிந்து கொள்ளலாம். கலைத்திட்டத்தைத் தயாரிப்பதில் ஆசிரியர் பங்கு கலைத்திட்டங்களைத் தயாரிப்பது யார்? அது ஒரு தனியாளின் செயல் அல்ல. பெரும்பாலும் கலைத்திட்ட அபிவிருத்திக் குழுக்கள் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். கலைத்திட்டக் குழுக்களில் பங்கு கொள்வோரில் ஆசிரியர் முக்கிய இடம் பெறுவார். பாட அறிவு

மட்டுமன்றி கற்பித்தல் அனுபவம், மாணவர் உணர்வுகள் என்பனவற்றை அறிந்துள்ள ஆசிரியரால் கலைத்திட்டத்தைத் தயாரிக்கும் போது பெரும் பங்களிப்புச் செய்யலாம்.

ஒவ்வோரு மாணவர் குழுக்களுக்கும் தேவையான அளவு பாடவிடய அறிவின் அளவு, அறிவின் தரம், கற்கும் திறமை என்பன பற்றியுள்ள அனுபவம், அறிவு, பயிற்சி போன்றவற்றுக்கேற்ப கலைத்திட்டத் தயாரிப்பில் பங்கு கொள்ளலாம். கலைத்திட்டத் தயாரிப்பில் நிபுணத்துவ அறிவு மட்டும் போதாது. அதன் நடைமுறை அனுபவம் பெற்றிருப்பவர் ஆசிரியரே. ஆகவே கலைத்திட்டத் தயாரிப்பில் ஆசிரியரின் பங்கு முக்கியமானது.

தலைமைத்துவம், பின்பற்றுதல் என்பவற்றில் ஆசிரியர் கலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் பிரதான (தலைமை) பங்கு வகிப்பது ஆசிரியராகும். கலைத்திட்டம் தொடர்பாக மாணவர்களது, பெற்றோரினதும் ஒத்துழைப்பைப் பெற்று நடைமுறைப்படுத்துவதில் ஆசிரியர் தானாகவே தலைமையைப் பெறுகிறார். பாடசாலை அதிபரைத்தவிர இத் தலைமை பெற ஆசிரியர் போல் வேறொருவரில்லை. அதே போல் கலைத்திட்டத் தயாரிப்பாளர்களின் வழிமுறைக்கேற்ப ஆசிரியர் நடந்து கொள்ளவும் வேண்டும். தலைமைத்துவமும் பின்பற்றலும் ஒரு செயல்பாட்டின் இரு துருவங்களாகும். கலைத்திட்டத்தினை முறைப்படி பயன்படுத்திக் கொள்ளவும், ஏனையோரைக் கலைத்திட்டம் நோக்கி திசை திருப்பவும் முன்னின்று கருமமாற்ற வேண்டியவர் ஆசிரியரே. கலைத்திட்டம் ஒன்றின் வெற்றியும், நிராகரிப்பும் தங்கியிருப்பது ஆசிரியரின் தொழிற்பாட்டிலேயாகும். முகாமைத்துவத்தில் ஆசிரியர் பங்கு கலைத்திட்டம் ஒன்று திட்டமிட்ட மாத்திரத்தில் அல்ல தயாரித்த மாத்திரத்தில் அதனை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தலாம் எனக்கூறமுடியாது. கலைத்திட்டம் வகுப்பறை கற்றல்-கற்பித்தலில் நடைமுறைப்படுத்துவதற்கு முகாமைத்துவ திறமைகள் தேவைப்படுகிறது.

இதற்காக காலம், இடவசதி, மாணவர் தொகை, மாணவர் கற்கும் வகுப்பு, உபகரணம், கற்பித்தல் முறை, செயற்பாடுகள் என்பன கவனத்திற் கொண்ட பாடத்திட்ட முகாமைத்துவம் ஆசிரியரிடம்

ஒப்படைக்கப்படுகிறது. இதற்கு பாடநிபுணத்துவ ஆசிரியர் போன்றே பாட ஆசிரியர் தத்தம் பங்களிப்பு தொடர்பாக பொறுப்புடையவராவர். கலைத்திட்ட மாற்றங்கள் கலைத்திட்டம் தொடர்பாக நடைமுறை அனுபவம் ஆசிரியருக்கே உண்டு என்பதை அறிவோம். நடைமுறை அனுபவமுள்ள ஆசிரியர் கலைத்திட்டத் தயாரிப்பு போன்றே பாடத்திட்ட மாற்றத்திலும் முக்கிய பங்கு கொள்வர். இங்கு கலைத்திட்ட மாற்றம் எந்நிலைகளில் ஏற்படும் என்பதைக் கவனிக்கலாம். கல்வி நோக்கங்களை மாற்ற வேண்டிய தேவைகள் ஏற்படும். மேலும் பாடத்திட்ட உள்ளடக்கம் அல்லது முறைகள் போதுமானதாக இல்லாவிடின் கலைத்திட்டத்தில் மாற்றங்கள் செய்ய நேரிடும்.

சிலவேளை ஒரு சமூகத்தில் அரசியல் ரீதியான கொள்கை மாற்றங்கள் ஏற்படும் போதும் கலைத்திட்ட மாற்றங்கள் செய்யவேண்டி ஏற்படும். இலங்கையில் ஆட்சியாளர் மாறும் போது இத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டு உள்ளன. வேறுசிலவேளை ஏதாவது ஒரு பாடத்துறை நாட்டுக்கு அல்லது சமூகத்துக்கு பொருத்தமற்றதாகவோ தற்கால சமூக அமைப்பிற்குப் பொருந்தாததாகவோ இருக்குமிடத்து கலைத்திட்ட மாற்றம் செய்ய வேண்டியேற்படும். மாணவர் சார்பாகப் பார்க்கும் போது அவர்களது தகைமைக்குக் கலைத்திட்ட அளவு கூடிக் குறைந்து இருக்கும் போது மாற்றங்கள் செய்ய வேண்டிவரும். புதிய பாடத்திட்டங்கள் பரீட்சார்த்திகரமாகப் புகுத்தும் போதும் கலைத்திட்ட மாற்றங்கள் செய்யப்படும்.

**உ.ம் :-** புதிய கணிதம், சமூக அறிவியல், சுற்றாடல் தொழிற்பாடுகள் ஆகிய பாடத்துறைகள் இலங்கையில் சமாப்;பித்த சந்தர்ப்பங்களைக் கவனத்திற் கொள்ளலாம். இத்தகைய கலைத்திட்ட மாற்றங்கள் எந்நிலையில் நிகழ்ந்த போதும் அவை அவசரமாக நடைமுறைப்படுத்தப்பட மாட்டாது அதற்காக போதிய காலம் ஒதுக்குதல் வேண்டும். நடைமுறையிலுள்ள கலைத்திட்டம் பற்றி அறியவும், மாற்றம் செய்யவேண்டிய மாற்றங்களைத் தீர்மானிப்பதற்கும் மாற்றம் செய்யப்பட்ட கலைத்திட்டங்களைப் பரீட்சார்த்தமாகச் செய்து பார்க்கவும் காலம் தேவைப்படும். கலைத்திட்ட மாற்றம் தொடர்பாக ஆசிரியரின் பங்கு நடைமுறையிலுள்ள கலைத்திட்டம் பற்றி நன்கு கற்றுக்கொள்ள ஆய்வாளரான ஆசிரியருக்கு முக்கிய இடம் உண்டு.

பாடத்திட்டம் தொடர்பாக நடைமுறை அனுபவம் உள்ள ஆசிரியர், நடைமுறைப்படுத்த வேண்டிய அம்சங்கள் மாற்றம் செய்ய வேண்டிய அம்சங்கள் அதில் எழும் பிரச்சினைகள் என்பன பற்றி நல்ல அறிவு உள்ளவராக இருப்பார். பாட நிபுணர்கள் முன் இவ்விடயங்களைச் சமர்ப்பிக்க ஆசிரியருக்கு முடியும்.

கலைத்திட்ட மாற்றம் தொடர்பான தேவைகள் பற்றிய நல்லறிவுள்ள ஆசிரியர், ஒரு தலைவராக, மாற்றங்கள் தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல், அவை ஏற்றவை என நிரூபிக்க காரணங்கள் எடுத்துக்காட்டி உறுதிப்படுத்தல் ஆகிய கருமங்கள் ஆசிரியர் உடையது.

இவ்வாறு முன்னின்று கருமமாற்றுதல் தலைமைத்துவத்தின் பங்களிப்பாகும். கலைத்திட்ட மாற்றங்கள் தொடர்பான வரைவிலக்கணம் கூறுபவராக ஆசிரியரை அறிமுகப்படுத்தலாம். மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் தெளிவாகும் முறையில் விளக்கக்கூடியவர் ஆசிரியரே. அவராலேயே கலைத்திட்டத்தைப் பொருளுடையதாக்கலாம். வகுப்பறையிலேயே பயன்படுத்தும் முறைகளுக்கு ஏற்ப அதன் பொருளும் மாறும். கலைத்திட்ட மாற்றம் தொடர்பான நிருவாகியும் அவரே. உண்மையில் மாற்றிய கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துபவர் அவரே. கலைத்திட்ட கோட்பாட்டினை செயல்முறைப்படுத்துவது ஆசிரியராகும் அல்லது நடைமுறைப்படுத்துவது ஆசிரியராகும்.

மாற்றப்பட்ட கலைத்திட்டம் ஒன்றை மதிப்பீடு செய்தல் அவசியமாகும். இம் மதிப்பீட்டால் ஆசிரியர் முக்கிய பங்கு கொள்கிறார். கலைத்திட்டம் பரீட்சார்த்தகரமான நிலையிலும் உண்மையில் நடைமுறைப்படுத்தும் நிலையிலும் மதிப்பீடுகளை மேற்கொள்ளலாம்.

பாடத்திட்ட மாற்றத்திற்கு முன்னும் பின்னும் இருந்த நிலைபற்றி ஆசிரியர் அறிந்து வைத்திருப்பதால் கலைத்திட்ட மாற்றங்களை மதிப்பீடு செய்வதில் ஆசிரியரின் பங்கு முக்கியமானது. கலைத்திட்டதை மாற்றுவதில் ஆசிரியர் பங்கு மகத்தானது மாணவர்களினதும் பெற்றோர்களினதும் உளநிலை ஆசிரியர் உளநிலை என்பன பற்றி நன்கு விளங்கிக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் அவருக்கு இருப்பதனாலும் மாணவர் தரம், பிரச்சினைகளுக்குரிய இடங்கள், பொருத்தமற்ற

இடங்கள் என்பன பற்றி நன்கு அறிபவர் ஆசிரியர் என்பதனாலும் மாற்றங்களை ஏற்படுத்தும் செயல் வீரராக ஆசிரியரைக் கொள்ளலாம். கலைத்திட்டம் மாற்றம் அடைவதற்கான காரணங்கள் மனிதனின் அனுபவங்கள், தொழிநுட்ப மாற்றங்கள், கற்றல், கற்பித்தல் பற்றிய உளவியல் ஆராய்ச்சி, புதிய கல்வித் தத்துவங்கள் என்பவற்றின் அடிப்படையில் பல்வேறு நாடுகளதும் கலைத்திட்டங்கள் சென்ற தசாப்தத்தில் மிக வேகமாக மாற்றமடைந்தன. ஒரு புறத்தில் பழைய பாடங்களுக்குப் பதிலாக மாற்றமடைந்து வருகின்ற தொழிநுட்ப உலகிற்குப் பொருத்தமான பாடங்கள் கலைத்திட்டத்தில் சேர்க்கப்பட்டன.

உதாரணமாக பழைய கணிதத்திற்குப் பதிலாகப் புதிய கணிதமும் இலத்தீன், பாளி, சமஸ்கிருதம் போன்ற பாடங்களுக்குப் பதிலாகப் புதிய தொழிநுட்ப பாடங்களும் கலைத்திட்டத்தில் சேர்க்கப்பட்டன. புவியியல், வரலாறு, பொருளியல், குடியியல் என வெள;வேறாகக் கற்பிக்கப்பட்ட பாடங்களை ஒன்றிணைக்கப்பட்டு மாணவர்களின் சூழலுக்கும் வாழ்க்கைக்கும் பொருத்தமான வகையில் சமூகக் கல்வி என்ற பாடம் உருவானது. பிள்ளை உளவியலாளரான பியாஜே என்பவர் சிறு பிள்ளைகளின் அறிவு வளர்ச்சி தொடர்பாகச் செய்துள்ள ஆராய்ச்சிகளின் அடிப்படையில் பாடசாலை ஆரம்ப வகுப்புக்கள் என்பவற்றின் கலைத்திட்டத்தில் பாரிய மாற்றங்கள் இடம்பெற்றன. சிறு பிள்ளைகளை எழுத, வாசிக்கத் தயார் செய்தல், ஆரம்ப கணிதம், மொழி தொடர்பான எண்ணக் கருக்களைக் கற்பித்தல் பிள்ளைகளின் அறிவு முதிர்ச்சிக்கு ஏற்ப செய்யப்படல் வேண்டும்.

இந்த ஆராய்ச்சியின் அடிப்படையில் சிறுவர் உலகிற்கும் அறிவு மட்டத்திற்கும் பொருத்தமான ஒரு கலைத்திட்டம் உருவானது. அன்று பிள்ளையைச் சிறு மனிதனாகக் கருதிய யுகத்தில் ஆரம்ப வகுப்புக்களில் பயன்படுத்தப்பட்ட கலைத்திட்டத்தை விடவும் முற்றிலும் முரணான ஒரு கலைத்திட்டத்தை இன்று காணலாம்.

ஜோன் டுவி, புரூணர் போன்ற கல்வியியயலாளர்கள் அவதானம், ஆய்வுகள் பிரச்சினை தீர்த்தல் ஆகிய முறையைப் பயன்படுத்துவதன் மூலம் சிறு பிள்ளைகளின் கல்வி சிறப்பாக நடைபெறுகின்றது எனச் சுட்டிக்காட்டியுள்ளார். ஆகையால் இன்று பெரும்பாலான நாடுகளின்

கலைத்திட்டம் என்பன புத்தகங்கள் வகுப்புச் சுவர்கள் என்பவற்றிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாது, ஆய்வுகூடங்கள், தொழிற்சாலைகள், பண்ணைகள், சமூகம் என்பவற்றையும் கொண்ட விரிவான நோக்கங்களை உடையதாயுள்ளது.

கலைத்திட்ட நவீனமாக்கல் *'**மாறுகின்ற உலகிற்கும் சமூகத்திற்கும் பொருத்தமான வகையில் கலைத்திட்டத்தில் மாற்றங்கள் இடம்பெறுவதே கலைத்திட்ட நவீனமாக்கம்**'* என ஜான் டூவீஎன்பவர் குறிப்பிடுகின்றார்.

நவீனமாக்கல் கற்றல், கற்பித்தல் செய்முறையுடன் இணைந்து செல்லல் வேண்டும். இச் செயன்முறை இருந்தாற்போல் இடம் பெறாது தொடர்ச்சியாக இடம்பெற வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்வாறு இடம்பெற்றால் அது பழைய கலைத்திட்டமாகாது. ஏற்கனவே அமுலில் இருந்து கலைத்திட்டத்தை முற்றிலும் மாற்றியமைத்தல் அல்லது மாறிவருகின்ற சமூகத்தின் தேவைகள், பிரச்சினைகள் என்பவற்றையும் நவீன தொழிநுட்ப உலகின் தேவைகளையும் நிறைவேற்றக்கூடிய வகையில் கல்வி ஆராய்ச்சிகளின் அடிப்படையில் கண்டுபிடிக்கப்பட்ட விளைவுகளுக்கு ஏற்ப அமுலில் உள்ள கலைத்திட்டத்தின் சில பகுதிகளைப் புதுப்பித்தல் கலைத்திட்ட நவீனமாக்கற் செயன்முறை எனலாம்.கலைத்திட்ட நவீனமாக்கற் செயன்முறையில் பங்கெடுக்கப்பவர்கள்,

ஆசிரியர் மத்திய நிலையம்,ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள், பல்கலைக்கழகக் கல்விப் பீடம், பாடசாலைச் சங்கங்கள், கலைத்திட்ட நிலையம், உயர் வகுப்பு மாணவர்கள், தொழிநுட்ப முகாமையாளர் சமூகப் பொறுப்பு மிக்க பிரசைகள் என்போரைக் கொண்ட கலைத்திட்ட அபிவிருத்திச் சபை போன்றனவாகும்.

சமூகத்தின் கண்ணாடியாக திகழும் பாடசாலையில் முக்கியமான அம்சமாக ஆசிரியரும், கலைத்திட்டமும் காணப்படுகின்றது என்றால் அது பொய்யில்லை . நிலைத்திருக்கும் அபிவிருத்தியானது எதிர்கால சந்ததியினர்க்கு வளங்களை சேமித்தலாகும். அது போல எதிர்கால மாணவர்களுடைய சீரிய வாழ்க்கைக்கு கலைத்திட்டம் காலத்திற்கு பொருத்தமாக அமையவேண்டும். அப்போதுதான் நாட்டின் அபிவிருத்தி வளம் பெறும். 'ஏட்டுச்சுரக்காய் கறிக்குதவாது' என்றபழமொழி போல

அறிமுகப்படுத்தப்படும் கலைத்திட்டமானது புத்தகத்தின் சாயலாக அமையாமல் நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்றதாக அமைய வேண்டும். இத்தகைய சாயலை நிஜப்படுத்துவராக சமூகத்தில் ஆசிரியர் காணப்படுகின்றார். நிஜமும் நிழலும் இணையும் போதே மாணவ வாழ்வு உயிர்ப்பெறும் என்பதில் ஐயமில்லை.

GK ACADEMY